# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
# Tamilnadu Government Employees' Association
(பதிவு எண் 237/84)

தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்

எண். 46, தோழத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeags@gmail.com

மாநிலத் தலைவர்
மு.சுப்பிரமணியன்

பொதுச் செயலாளர்
மு.அன்பரசு

மாநில துணைத் தலைவர்கள்
ந.குமாரவேல்
ஆ.செல்வம்
எஸ்.தமிழ்ச்செல்வி
சு.பார்த்திபன்
மொ.ஞானத்தம்பி
மு.சுப்பிரமணியன்

மாநிலப் பொருளாளர்
எம்.தங்கராஜ்

மாநிலச் செயலாளர்கள்
இரா.பன்னீர்செல்வம்
சி.ஆர்.இராஜகுமார்
என்.ஜனார்த்தனன்
தீ.கலைசெல்வி
எம்.சௌந்தரராஜன்
ஏ.பெரியசாமி


ஊடகச் செய்தி எண்.03/2019 நாள்.12.03.2019

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியன் மற்றும் பொதுச் செயலாளர் மு.அன்பரசு ஆகியோர் இணைந்து வெளியிடும்

ஊடகச் செய்தி

## பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் - பொள்ளாச்சி வன்கொடுமைகளுக்கு காரணமான அனைத்து குற்றவாளிகளையும் சட்டத்தின் முன் நிறுத்திடுக

## அரசு ஊழியர் சங்கம் சார்பில் 15.03.2019 (வெள்ளிக்கிழமை) தமிழகம் முழுவதும்மாவட்டத் தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம்

உலகம் முழுவதும் 108ஆவது சர்வதேச மகளிர் தின அனுசரிப்புகள் நடந்துவரும் இம்மாதத்தில் தமிழகமே சர்வதேச சமூகத்தின் முன்பு தலைகுனியும் அளவிற்கு மிகக்கொடூரமான நமது நெஞ்சை பதபதைக்கச் செய்யும் மாபாதகம், கயமைக் கும்பலால் கோவை மாவட்டம், பொள்ளாச்சியில் நடைபெற்றுள்ளது. பள்ளி, கல்லூரி மாணவிகள் தொடங்கி பேராசிரியர், மருத்துவர், இல்லத்தரசிகள் என சகலதரப்பு பெண்களையும் சமூக வலைதளங்கள் மூலமாக நட்பு ஏற்படுத்திக் கொண்டு, நம்பிக்கையை பெற்று தனிமையில் சந்திக்க வலைவிரித்துள்ள கயவர்கள் 200க்கும் மேற்பட்ட பெண்களை பண்ணை வீடுகளில் வைத்து பாலியல் வன்கொடுமைகள் செய்துள்ளதோடு, அடித்துத் துன்புறுத்தி அனைத்தையும் காட்சிப் பதிவுகளும் செய்து பணம் பறித்து வந்துள்ளனர் என்ற செய்தியும் அதிகாரம் மிக்கவர்களின் காமப்பசிக்கு அவ்வப்போது மிரட்டி அனுப்பியுள்ளனர் என்ற செய்தியும் நம்மை கொதிப்படையச் செய்கிறது.

கடந்த ஓராண்டில் மட்டும் பொள்ளாச்சியில் 7 மாணவிகள் தற்கொலை செய்துகொண்டுள்ளனர் என்ற போதிலும் அனைத்து வழக்குகளும் காதல் தோல்வி என்ற வகையில் முடித்து

தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601


வைக்கப்பட்டுள்ளன. அப்போதே , மேற்படி வழக்குகளை மறுவிசாரணை செய்யவேண்டும் என்ற மாதர் அமைப்புகளின் கோரிக்கைள் புறந்தள்ளப்படாமல் விரிவான விசாரணை மேற்கொள்ளப்பட்டிருந்தால், பல பெண்களை தற்போது வெளிவந்திருக்கும் கொடுரங்களிலிருந்து காப்பாற்றி இருக்க முடியும்.

வெளிவந்துகொண்டிருக்கும் செய்திகளிலிருந்து தற்போது கைதுசெய்யப்பட்டு குண்டர் சட்டத்தில் அடைக்கப்பட்டிருக்கும் நால்வர் மட்டுமே குற்றவாளிகளாக இருக்க முடியாது என்பதும் அமைப்பு ரீதியிலான 20 நபர்களுக்கும் மேற்பட்ட கூட்டம் தொழில்முறையில் இக்கொடுங்குற்றத்தினை 7 ஆண்டுகளாக நடத்திவருவதாகவும் தெரிகிறது. இந்த கொடூர குற்றவாளிகளுக்கு அரசியல் தொடர்புகள் இருப்பதாகவும் அதிகாரம் மிக்கவர்களின் பாதுகாப்பு மற்றும் அதிகாரம் மிக்கவர்களின் குடும்ப உறுப்பினர்களும் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் செய்திகள் வருவது நமது கவலையையும் அச்சத்தையும் அதிகரிக்கச் செய்கிறது. கைதுசெய்யப்பட்ட 8 நபர்களில் நால்வர் உடனடியாக பிணையில் வந்துள்ளதும், புலனாய்வை செய்துவரும் காவல் கண்காணிப்பாளர் புலனாய்வின் ஆரம்பக்கட்டத்திலேயே குண்டர் சட்டத்தில் அடைக்கப்பட்டுள்ள நால்வரைத் தவிர வேறு யாரும் குற்றவாளிகள் இல்லை என தெரிவிப்பதும் அரசியல் தொடர்புகள் ஏதும் இல்லை எனத் தெரிவிப்பதும் காவல் துறையின் மீதான அவநம்பிக்கையை அதிகரிக்கச்செய்துள்ளதுடன் கண்ணியத்தையும் கேள்விகுள்ளாக்கியுள்ளது.

பொள்ளாச்சி மட்டுமன்றி தமிழகம் முழுவதும் மக்கள் கொந்தளித்துள்ள நிலையிலும் நாளுக்கு நாள் மக்களின் போராட்டம் அதிகரித்துள்ள நிலையிலும் அரசு சிபிஐ விசாரணைக்கு இன்று உத்திரவிட்டிருந்தாலும் பாதிக்கப்பட்ட பெண்கள் புகார் அளிக்க உகந்த சூழல் உருவாக்கப்படவில்லை. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தைப் பொறுத்தமட்டில், ஊழியர்களின் பொருளாதார, பணி சார்ந்த கோரிக்கைகளுக்காக மட்டுமன்றி சமூகப் பிரச்சினைகளுக்காகவும் தொடர்ந்து தமது அழுத்தமான குரலை பதிவுசெய்து வந்துள்ளோம். ஜல்லிக்கட்டு, நீட் தேர்வு, காவிரி, ஸ்டெர்லைட், விவசாயிகள் பிரச்சினை, விலைவாசி ஏற்றம், வேலையில்லாத் திண்டாத்திற்கு எதிரான குரல் என அனைத்துபிரச்சினைகளுக்கும் எமது ஊழியர்கள் மக்களின் உணர்வுகளோடு ஒன்றுபட்டு போராடியுள்ளனர். அரசு ஊழியர்கள் தமது கோரிக்கைகளுக்காக போராடும்போது, மக்களின் பிரச்சினைகளுக்காக இவர்கள் போராடியுள்ளார்களா என ஊடக விவாதங்களில் பங்கேற்பாளர்கள் உண்மைக்கு மாறான செய்தியினை விஷமத்தனமாக பரப்புரை செய்தபோதும் சமூக பிரச்சினைகளில் சமரசமற்ற போராட்டங்களை எமது சக்திக்கு உட்பட்டு நடத்தியுள்ளோம்.

அதன் நீட்சியாகவும், தற்போது தமிழகத்தை உலுக்கிவரும் பொள்ளாச்சி பாலியல் பயங்கரவாதத்தை எதிர்த்தும், இப்படுபாதகச் செயலில் தொடர்புடைய அனைத்து குற்றவாளிகளையும் அரசியல் அழுத்தங்களுக்கும் அதிகார மூர்க்கங்களுக்கு அடிபணியாமலும் சமூகத்திற்கு அடையாளம் காட்டி, சட்ட ரீதியான தண்டனையினை விரைந்து பெற்றுத்தரவேண்டும் என்பதுடன் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நம்பிக்கையூட்டி புகார்களை பெற்றோ அன்றி கிடைக்கப்பெற்றுள்ள ஆதாரங்களின் அடிப்படையில் காவல்துறை தாமாக முன்வந்தோ கடுமையான சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து நீதியினை பெற்றுத்தரவேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்து வரும் 15.03.2019 அன்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் தமிழகம் முழுவதும் மாவட்டத் தலைநகரங்களில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

தங்கள் நம்பிக்கையுள்ள

**(மு.அன்பரசு)**
பொதுச்செயலாளர்